# கலைஞரும் நானும்

98

“முத்தமிழறிஞர் கலைஞர்தான் தமிழ் சினிமாவுக்கு மிகப் பெரிய திருப்புமுனையை அளித்தவர். தமிழ்த்திரையுலகில் எங்களைப் போன்றவர்களின் நம்பிக்கை முனையும் கலைஞர்தான்” என தனது நினைவுகளைப் பகிர்கிறார் இயக்குனர் காரைக்குடி. நாராயணன்.

# ‘மிசா காலமும் இதய வாழ்த்தும்!’

**இயக்குனர் காரைக்குடி . நாராயணன்**



திரையுலகம்தான் என் வாழ்க்கை என முடிவு செய்தபோது, எனக்குச் சொல்லப்பட்ட பாடங்கள் எல்லாம் கலைஞரின் திரைப் படங்களும், வசனங்களும்தான். அவரைப் பற்றிக் கொண்டால், திரையுலகம் உங்களைக் கைவிடாது என்று சொன்னார்கள். அவரது எழுத்துகள், உரைகள் வழி அவரது கரத்தை ஏற்கெனவே பற்றியவன் நான். அவரது திரைப்படங்களை விட்டுவிடுவேனா என்ன? எல்லாமே அத்துப்படியானவை.

மூதறிஞர் ராஜாஜியின் கதை, ‘திக்கற்றப் பார்வதி’ என படமான போது, அந்தப் படத்தின் வசனகர்த்தாவாக திரைத்துறையில் வாழ்க்கையைத் தொடங்கினேன். படம் வெளிவருவதற்கு முன்பே, ராஜாஜி மறைந்தார், ஆனால், அந்த படத்தின் வசனங்கள் மூலம் கவனம் பெற்றேன். குறிப்பாக, கலைஞரிடம். அந்தப் படத்துக்காக குடியரசுத் தலைவர் விருது பெற்றபோது, என்னை அழைத்து கலைஞர் வாழ்த்தினார்.

1966-ஆம் ஆண்டிலிருந்து 70-ஆம் ஆண்டு வரை, இயக்குனர் பீம்சிங் அவர்களின் நியூடோன் ஸ்டூடியோவில் உதவி இயக்குனராக பணியாற்றிக் கொண்டிருந்தேன். அங்குதான் அண்ணாவின் நாவலை ‘காதல் ஜோதி’ என்ற பெயரில் இயக்குனர் திருமலை மகாலிங்கம் இயக்கிக் கொண்டிருந்தார்.

அந்தத் திரைப்படம் ஏழாயிரம் அடிகள் வளர்ந்த நிலையில், அறிஞர் அண்ணாவின் கதை என்பதால், கலைஞர் அவர்கள் அந்தப் படத்தைப் பார்ப்பதற்காக வந்திருந்தார்.

அன்று உதவி இயக்குனராக இருந்த நான் முதன்முறையாக கலைஞரை நேரில் பார்த்ததும் வியந்து நின்று கொண்டிருந்தேன். அப்போது தண்ணீர் கேட்டார். தண்ணீருக்குப் பதிலாக ஒரு டம்ளரில் சோடாவை ஊற்றி வந்து கொடுத்தார் ஒரு உதவியாளர். கலைஞரும் அதைக் குடித்துவிட்டு “என்னைய்யா... தண்ணி உப்பா இருக்கு?”என்று கேட்டார்.

“இல்லீங்கய்யா தண்ணி கிடைக்கலை, அதனால சோடா கொண்டு வந்தேன்” என்று அந்த உதவியாளர் கூறினார். உடனே கலைஞர், “தண்ணியிலயும் உப்பு இருக்கு, படத்திலும் உப்பு இருக்கு என ‘பஞ்ச்’ வைத்தார். அந்தத் திரைப்படம் சாரமற்ற வாழ்வு வாழும் விதவை ஒருவரை ஒரு இளைஞன் மறுமணம் செய்து கொள்ளும் கதை என்பதால், அப்படி சிலேடையாகக் கூறினார் அவரது ‘டைமிங்’ நகைச்சுவை கேட்டு, அங்கிருந்த எல்லோரும் ரசித்தனர். அன்று அவரது ’பஞ்ச்’சுகளை ரசிக்க தொடங்கிய நான் அதன் பிறகு பல உரை யாடல்களை நேரில் ரசித்திருக்கிறேன்.

### காரைக்குடி வருகையா?

ஏவி.எம் ஸ்டுடியோவின் பொன் விழாவை யொட்டி, அங்கு பணியாற்றிய அனைவருக்கும் விருது கொடுத்தனர். விழாவிற்குத் தலைமை ஏற்றவர் முத்தமிழறிஞர் கலைஞர். ஏவி. எம்மில் மிக முக்கியமான விழாக்களுக்குத் தலைமை ஏற்று நடத்திக் கொடுத்தவரும் தலைவர்தான்.

அந்த விழாவுக்கு, ஏவி.எம் நிறுவனத்தின் முன்னாள், அந்நாள் பணியாளர்கள் பலரும் வந்திருந்தனர். மேடையில் கலைஞரிடம் விருது பெறுகையில், ஒவ்வொரு பணியாளரையும் அறிமுகப்படுத்தினார் ஏவி.எம், சரவணன்.

எனது முறை வந்தபோது, ஏவி.எம்மின் படங்களில், சீரியலில் பணியாற்றிய, ‘காரைக்குடி நாராயணன்’ என்று அறிமுகம் செய்து, ‘அவருக்கு கலைஞர் அவர்கள் விருது வழங்கு வார்’ என்று கூறினார். இதைக் கேட்டதும் கலைஞர் அவர்கள் ‘என்னைய்யா ஊர்க்காரர் விழாவுக்கு ஓடி வந்துட்டியாய்யா?’ என்று கேட்டார். ஏனென்றால், ஏவி.எம் நிறுவனத்தினர் காரைக்குடியிலிருந்து, சென்னைக்குப் புலம்பெயர்ந்து படப்பிடிப்புத் தொழிலில் ஈடுபட்டவர்கள். அதையொட்டி நானும் காரைக்குடி என்பதால், அவர் அப்படி கேட்டார். அப்படி கேட்டது எனக்கு மிகவும் மகிழ்ச்சியாகவும் வாஞ்சையாகவும் இருந்தது.

### ‘கட்சியில் சேரு’

ஒருமுறை கலைஞர் அவர்களின் பிறந்தநாள் விழாவுக்கு வாழ்த்துச் சொல்ல வேண்டுமென கோபாலபுரம் இல்லத்துக்குச் சென்றிருந்தேன். வழக்கம் போலவே அவருக்கு வாழ்த்துச் சொல்வதற்காக, அரசு அதிகாரிகள், கட்சிக் காரர்கள், பொதுமக்கள் என கோபாலபுரமே நிரம்பி வழிந்தது. அந்த சமயத்தில் ‘பராசக்தி’ பட இயக்குனர்கள் கிருஷ்ணன் பஞ்சு இருவரில், பஞ்சு சார் அவர்கள் அந்த வழி யாக வந்தார். நான் பஞ்சு சார் அவர்களின் பின்னே சென்று, கட்சிக்காரர்களின் வரிசையில் நின்று கொண்டேன்.

வாழ்த்த வரும் கட்சிக்காரர்கள் எல்லோ ருக்கும் கலைஞர் அவர்கள் 10 ரூபாய் கொடுப்பது வழக்கம். அவரது கையில் பணம் பெறுவது கட்சியினருக்கு உற்சாகம் தரக்கூடியது. நான் வாழ்த்தியபோது, என்னைப் பார்த்தவர் “யோவ் நீ என்ன கட்சிக்காரனா? உனக்கு பத்து ரூபாய் கிடையாது. நீ முதல்ல கட்சியில சேரு, அடுத்த வருஷம் உனக்கு பத்தும் பத்தும் இருபது ரூபாய் கொடுக்கிறேன்” என்றார். அவ்வளவு கூட்டத்திலும் அவர் என்னைக் கண்டு கொண்டதும், உரிமையோடு பேசியதும் என் வாழ்வில் மறக்க முடியாதவை.

### கலைஞரின் வசன காலம்

‘கலைஞரின் திரைப்பட வசன காலத்துக்குப் பிறகு, **தமிழ் சினிமா வசனத்தில் முன்னேறி இருக்கிறதா, பின்னடைவு சந்தித்துள்ளதா?’** என்கிற தலைப்பில் ஒரு பட்டிமன்றம் சென்னை, கலைவாணர் அரங்கத்தில் நடை பெற்றது. இதற்கு நடுவராக இருந்தவர் ‘வீரபாண்டிய கட்டபொம்மன்’ திரைப்படத்திற்கு கதை வசனம் எழுதிய சக்தி கிருஷ்ணசாமி.

திரைப்படத் தயாரிப்பாளரும் இயக்குன ருமான ஏ.எஸ்.பிரகாசம் தலைமையில், ஐந்து பேர் ‘முன்னேறி இருக்கிறது’ என்று பேசினார்கள். ‘முன்னேற வில்லை’ என்கிற அணிக்கு நான் தலைமையேற்றிருந்தேன். அந்த நிகழ்ச்சிக்கு வருகை தந்திருந்தார் கலைஞர்.

கலைஞரின் காலத்துக்குப் பிறகு திரைப்படங்களில், கதை வசனம் என்னென்ன வகையில் மாற்றங்களைக் கண்டது என்பதையும், அது நாடகத் தமிழ், உரைநடைத் தமிழ் எனப் பல மாற்றங்களைக் கண்டு, பேசும் தமிழாக மாறியது எப்படி என்பதை, ஏ.எஸ்.பிரகாசம் தலைமையிலான அணியினர் பேசினர். அவற்றைக் கேட்டு, ஒவ்வொரு பேச்சையும் ரசித்துக் கை தட்டினார் கலைஞர்.

எனது தலைமையிலான அணியினர், கலைஞரின் வசனங்களுக்குப் பிறகு எழுதப்பட்ட வசனங்கள் மக்களை ஈர்க்கவில்லை என பேசவேண்டும். கலைஞரோ எதிர் அணியினர் வாதங்களுக்குக் கைதட்டிக் கொண்டிருக்கிறார். இந்தச் சூழலில், அழுத்தமான வாதங்களை வைத்து பேசினால்தான், அவரது பாராட்டுகளை எங்கள் அணி பெற முடியும். அன்று, அவரது கவனம் ஈர்க்கும் வகையில், அவரது வசனங்கள் பலவற்றையும் தொட்டு, தமிழ்நாட்டில் அரசியல் அதிர்வலைகளை ஏற்படுத்திய அந்தப் பேனாவுக்குப் பின், எந்த பேனாவிலும் இரும்பு உலை கொதிக்கவில்லை. அவருக்குப் பின் திரைப்பட வசனங்கள் தேங்கி போய்விட்டன என நான் பேசியப் பேச்சினை வெகுவாக ரசித்தார்.

நிகழ்ச்சி முடிந்ததும், குழுவினரை அழைத்து பாராட்டியவர் என் தோள்களைச் செல்லமாக தட்டிக் கொடுத்தார். அன்று எனக்கு என்ன வியப்பு எனில், அவரது வசன காலம் தொடர்பான வாதத்தினையும் ரசித்தார். அவரது வசனங்களுக்குப் பின், வசன நடை மாற்றமடைந்தது என்கிற வாதத்தையும் ரசித்தார். இரண்டு வாதங்களையும் ஏற்றுக் கொண்டு பாராட்டிய பண்புதான் கலைஞரின் ஆளுமை என்பது. அவர் சொல்லாமல் சொன்னது, தற்பெருமையை, தான் விரும்ப வில்லை என்பதும்தான்.

**மணநாளுக்கு முதல் நாள் அன்று சரியாக கலைஞரிடமிருந்து வாழ்த்து வந்தது. ‘இதய வாழ்த்துகள்’ என வந்த அவரது முதல் வாழ்த்து என் வாழ்நாளில் மறக்க முடியாது.**


### மிசா நெருக்கடி நிலை

மிசா நெருக்கடி நிலை உச்சத்தில் இருந்த நேரத்தில் எனது திருமணம் ஏற்பாடாகி இருந்தது. கலைஞரைச் சந்தித்து, மணவிழாவுக்கு அழைக்கச் சென்றிருந்தேன். ஆனால், அவரை சந்திக்கக் கடும் கெடுபிடிகள் இருந்தன. தவிர, அவரைச் சந்தித்தால் எனக்கும் நெருக்கடி வரும் என கூறினர். ஆனாலும் எப்படியோ அழைப்பிதழை மட்டும் அவரிடம் சேர்த்து விட்டேன். மணநாளுக்கு முதல் நாள் அன்று சரியாக கலைஞரிடமிருந்து வாழ்த்து வந்தது. ‘இதய வாழ்த்துகள்’ என வந்த அவரது முதல் வாழ்த்து என் வாழ்நாளில் மறக்க முடியாது.

**தொகுப்பு :**
**எஸ்.கதிரேசன்**

....பகிர்வார்கள்

## திராவிடப் போராளிகளும் தமிழ்க் கனவும்..



திராவிட இயக்கத்தில் இணைந்து பயணித்த, தவிர்க்க முடியாத பெண் தலைவர்கள் குறித்து ‘முரசொலி’ பாசறைப் பக்கத்தில், ‘திராவிடப் போராளிகள்’ என்கிற தலைப்பில் தொடர் கட்டுரைகள் வெளியாகின. இளையோருக்கு வரலாற்றை அறிமுகம் செய்யும் வகையில், வழக்கறிஞர் அருள்மொழி அவர்கள் எழுதிய அந்தத் தொடரில், ‘திராவிடப் பெண் போராளி’களின் அரசியல் வாழ்க்கையைப் படம் பிடித்துக் காட்டியிருந்தார்.

‘திராவிடப் போராளிகள்’ ஒவ்வொருவரும் அடைந்த இன்னல்கள் கொஞ்சநஞ்சமல்ல. இந்தி எதிர்ப்புப் போராட்டத்தில் கைக்குழந்தையுடன் சிறை சென்ற பெண்கள், அரசியல் சட்ட எரிப்புப் போராட்டத்தில் சிறை சென்றவர்கள் என்று, நீளும் வரலாறு திராவிட இயக்கத்திற்கே உரிய பெருமையாகும்.

அந்தத் தொடர் கட்டுரைகள் தொகுக்கப்பட்டு, இரண்டு பாகங்களாக ‘முத்தமிழறிஞர் பதிப்பகம்’ வெளியிட்டது. வரவேற்பைப் பெற்ற அந்த நூல்கள் குறித்த அறிமுகக் கூட்டத்தினை வேலூரில், ‘தமிழ்க்கனவு’ என்கிற அமைப்பு வருகிற ஞாயிறு (1.12.2024) அன்று நடத்துகிறது.

வேலூர் சத்துவாச்சாரி, ‘புத்துமகரிஷி மூலிகைப் பண்ணை’யில் காலை 10 மணிக்குத் தொடங்கும் நிகழ்ச்சியில், நூல்கள் குறித்து அறிமுகம் செய்கிறார் எழுத்தாளர் சுகுணா திவாகர். நூல்கள் வாசிப்பு அனுபவத்தினை மருத்துவர் தி.ச.முகமது சயி, ப.இராஜேந்திர பிரசாத் உள்ளிட்டோர் பகிர்ந்து கொள்கின்றனர். வழக்கறிஞர் அருள்மொழி ஏற்புரையாற்றுகிறார்.

திராவிட இயக்க வரலாற்றை வாசிக்க அழைக்கிறது, தமிழ்க்கனவு. வாய்ப்புள்ளோர் செல்க.

## ஃப்ளாஷ்பேக்



### மகனுக்குப் பெயர் சூட்டிய தலைவர்



ரா.மோகன்

2006-ஆம் ஆண்டு, இளம் வயதிலேயே கழகத்தின் சார்பில் கவுன்சிலராகப் பணியாற்றும் வாய்ப்பு கிடைத்தது. அன்று முதலே முத்தமிழறிஞர் கலைஞரைச் சந்திக்கும் ஆர்வம் என்னைத் தொற்றிக் கொண்டது. 2015-ஆம் ஆண்டு என்னுடைய இளையமகனுக்குப் பெயர் வைக்க வேண்டும் என்பதை இன்றைய கழகத் தலைவர் அவர்களிடம் தெரிவித்தேன். இதைத் தொடர்ந்து மே 19 2015 அன்று கோபாலபுரம் இல்லத்தில் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களைக் குடும்பத்தோடு சந்தித்தோம். என் மகனுக்குப் பெயர் வைக்கச் சொல்லிக் கேட்டேன், பொதுச்செயலாளர் துரைமுருகன் அவர்கள் “என்னைய்யா பள்ளி செல்லும் குழந்தைக்குப் பெயர் வைக்க சொல்ற?” என்றார் நகைச்சுவையாக. பின்னர் என் குடும்பத்தார் பெயரை ஒரு தாளில் எழுதிக் கொடுக்கச் சொன்னார், எழுதிக் கொடுத்ததும் என் இளைய மகனுக்கு ‘இந்திரஜித்’ என்று பெயர் சூட்டி வாழ்த்தினார் முத்தமிழறிஞர்.

– **ரா.மோகன், பரமக்குடி ஒன்றியம், இராமநாதபுரம்.**

இது போன்ற அரிய புகைப்படங்களை சிறுகுறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம்.
அனுப்ப வேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை - 600 018. வாட்ஸ்அப் எண் : 90033–24473
மின்னஞ்சல்: youthwing@dmk.in

## கருவூலம்


### கலைஞரின் நூலுக்கு அண்ணா ‘அணிந்துரை’!

1968-ஆம் ஆண்டு சென்னையில், உலகத் தமிழ் மாநாட்டினை வெற்றிகரமாக நடத்தினார், அப்போதைய முதலமைச்சர் பேரறிஞர் அண்ணா. மாநாட்டுக்கு வந்திருந்த வெளிநாட்டுப் பிரதிநிதிகளுக்கு கலைஞரின் ‘சிலப்பதிகாரம்’ நூலும், அதனை, ஆங்கிலத்தில் மொழிபெயர்க்கப்பட்ட நூலும் வழங்கப்பட்டன. ஆங்கில மொழிபெயர்ப்பு நூலை, அண்ணா வெளியிட, ஆஸ்திரேலிய நாட்டுப் பிரதிநிதி ஜோர்தான் பெற்றுக் கொண்டார். கலைஞரின் ஆங்கில நூலுக்கு ‘அணிந்துரை’ எழுதி இருந்தார் அண்ணா.

## திராவிடத்தால் வாழ்கிறோம்

676

எழுத்து:
கோவி.லெனின்
ஓவியம்:
கி.சொக்கலிங்கம்




-வாழ்வோம்

RNI 1244/57 - Postal Reg.No.MA/43/2024-2026.Licenced to post under without pre payment of postage vide No.TN/WPP-94/SR/2024-2026 Published by Karthikeyan Shanmugasundaram on behalf of Murasoli Trust from No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 and Printed by R.N.Murugan at Dinakaran Press, No.2/2, Melur Main Road, Uthangudi, Madurai - 625 107. Editor: Karthikeyan Shanmugasundaram, Regn.No.7436, Ph:044-2817 9191, 2817 9131 Fax: 2817 9292.